அப்படியானால் அவர்களுக்கு மேலும் வேலைசெய்வதற்கு பணம் கொடுக்க கம்யூனிட்டி டெவலப்மெண்டு ப்ளாக்கிற்கு அடுத்த ஸ்டேஜில் என்ன செய்ய இருக்கிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM: கம்யூனிட்டி [டெவலப்மெண்டு ப்ளாக்கு திட்டம் முடிந்த பிற்பாடு போஸ்ட் இன்டென்ஸிவ் ப்ளாக், அதிலே ஓரளவு தொடர்ந்து வேலைநடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri K. SATTANATHA KARAYALAR: இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டத்திலும், சமுதாய நலத்திட்டத்திலும் நிர்வாகச் செலவு எத்தனை சதமானம் ஆகிறது ? இது இதர மாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எப்படி இருக்கிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM: அதற்கு வேண்டிய புள்ளி விவரங்கள் கனம் அமைச்சரவர்கள் இந்த டிபார்ட்மெண்டின் விவாதத்தின் போது விவரமாகக் கொடுத்தார்கள். மற்ற மாகாணங்களுக்கும் இதற்கும் அதிக வித்தியாசம் இருக்காது என்று நினைக்கிறேன்.

Sri D. S. AUTHIMOOLAM: சமுதாய நலத் திட்ட வேலை செய்து அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களில் வேலை முடிந்த பின்னால் அந்த பிளாக் ஏரியாவை "நான்-இன்டென்ஸிவ் ஏரியா" என்று, ஒரு வேலைக்கு ஆயிரம் ரூபாய்தான் மாக்ஸிமம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அது ரொம்ப குறைந்த பட்ச தொகையாயிருக்கிறது. குறைந்த பக்ஷம், 2,000 ரூபாய் மாக்ஸிமமாக்குவதற்கு சர்க்கார் கவனிக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: இதிலே நாம் கவனிக்கவேண்டியது, சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் எல்லாப்பகுதிகளுக்கும்கொடுத்தாக வேண்டும். ஆகையால் கம்யூனிட்டி டெவலப்மெண்டு ப்ராஜெக்ட் அங்கு இருக்கிற வரையில் அங்கே அதிகமாக செலவழித்து ஓரளவு அங்கு அபிவிருத்தி ஏற்பட்ட பிற்பாடு அது தொடர்ந்து நடப்பதற்கு எவ்வளவு குறைந்த அளவில் செய்யப்பட்டதோ அந்த அளவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகம் செலவு செய்யவேண்டுமானால் மற்ற ஒரு இடத்தில் செலவு செய்வதை குறைத்தாக வேண்டும். ஆனால் பரவலாக இந்தத் திட்டத்தைக் கொடுப்பது அவசியமாய் இருக்கிறது.

Sri K. S. G. HAJA SHERIFF: Just as the Municipalities in the urban areas are kept aloof from the operation of the scheme, will the Government consider the possibility of keeping the Corporation away from the scheme in the City and allow some sum from the scheme so that the City could be improved?

The Hon. Sri C. SUBRAMANIAM: As a matter of fact there are so many schemes to improve, particularly the City of Madras. If the money spent in the City of Madras is compared with the money spent in the rural areas, I do not think the citizens of Madras can legitimately complain.

Temples under Hindu Religious and Charitable Endowments Department.

* 295 *Q.*—**Sri P. G. MANICKAM**: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of temples under the control of the Hindu Religious and Charitable Endowments (Administration) Department;

(*b*) the number of temples for which trustees have been appointed by the department; and

(*c*) the number of Harijan trustees appointed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Six thousand five hundred assessable institutions and 7,209 minor institutions not assessable by the department.

(*b*) 899.

(*c*) 167.

SRI P. G. MANICKAM: ஸார், டிரஸ்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள கோயில்களில் ஹரிஜனங்களை டிரஸ்டிகளாக நியமிக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா? அதன் பிரகாரம் எல்லா கோயில்களிலும் ஹரிஜனங்களை டிரஸ்டிகளாக நியமிக்கப்படவில்லை என்பது தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கூடிய வரையில் ஹரிஜனங்களையும் டிரஸ்டிகளாக நியமிக்கப்படவேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் கொள்கை. அதை அனுசரித்து நியமிக்கப்பட்டும் வருகிறார்கள். 167 ஆலயங்களில் இது வரையில் ஹரிஜனங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் கூட முன்பு இல்லாத ஆலயங்களில், உதாரணமாக திருவண்ணமலையில் ஒரு ஹரிஜனை டிரஸ்டியாக நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய தகுதியை யெல்லாம் பார்த்துத் தான் டிரஸ்டிகளாக நியமிக்க வேண்டியிருக்கிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI: இந்த மாதிரி கோயில்களுக்கு டிரஸ்டிகளை நியமிப்பதில் கோயிலிலேயே நம்பிக்கையில்லாதவர்களை நுழைந்துவிடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? டிரஸ்டிகள் நியமிக்கப்படுவதில் பெண்களுக்கும் இடம் கொடுத்திருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நம்பிக்கையை யெல்லாம் சரிவர பரிசோதனை செய்வதென்பது சுலபமல்ல. கூடிய வரையில் ஆலயங்களில் நம்பிக்கையுள்ளவர்களையே டிரஸ்டிகளாக நியமிக்கப்படுகிறது. பெண்களும் டிரஸ்டிகளாக நியமிக்கப்படுகிறார்கள். பெண்களுக்கு ஆண்களை விட பக்தி அதிகம் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது.

House rent allowance to teachers in aided educational institutions.

* 296 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state whether any house rent allowance is paid to teachers in aided educational institutions?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

Location of industrial concerns.

* 298 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the names, details and the location of the industrial concerns started in the State during the past two years under the State Aid to Industries Scheme together with the figures about the financial aid given to each?

THE HON. SRI R. VENKATARAMAN: A list of industrial concerns which were granted loans under the Madras State Aid to Industries Act, 1922 during 1955–56 and 1956–57 has been printed and placed on the table of the House.

---

* Printed as Appendix III on pages 614–622 infra.